JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# இல்லறத்தில் மக்கட்பேறு : திருக்குறளும் திருவிவிலியமும்

**ந.ஆ. வேளாங்கண்ணி,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635 601,
திருப்பத்தூர் மாவட்டம்.

**முன்னுரை**

தாங்கிப் பிடிக்கும் தாயும் தூக்கி நிறுத்தும் தந்தையும் இருக்கும் வரை எந்த மகனும் மகளும் வீழ்ந்து போனதாகச் சரித்திரம் இல்லை. இல்லறம் நிறைவு பெறுவதே மக்கள் செல்வத்தால்தான். பிள்ளைகளின் மகத்துவம் என்பது அவர்களை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பதில்தான் உள்ளது. இன்றைய காலச் சூழலில் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதைக் காட்டிலும் அவர்களை வளர்த்தாளாக்குவது என்பது அதுவும் அறவழியில் ஆளாக்குவது என்பது கடினமான ஒன்றாகக் கருதப்படுகிறது. என்னதான் பார்த்துப் பார்த்து வளர்த்தாலும் பிள்ளைகள் சில நேரங்களில் அறநெறி தவறி வாழ்கின்றனர் என்பதை இச்சமுதாயத்தில் காணமுடிகிறது. இப்படிப்பட்ட சூழலில் திருக்குறள் மக்கட்பேறு என்ற அதிகாரத்தை முன்வைத்துப் பேசுகிறது. இதேபோல் திருவிவிலியமும் ஆங்காங்கே மக்கட்பேற்றைப் பற்றி பேசுகிறது. ஆகவே இல்லறத்தில் இம்மக்கட்பேற்றின் பங்கு என்ன? சிறப்புகள் என்ன? கடமைகள் என்ன? இன்றைய நிலை என்ன? இத்தகைய வினாக்களை முன்வைத்து இக்கட்டுரை ஆய்வாகவும் தேடலாகவும் அமைகிறது.

**மக்களின் மெய் தீண்டலும் மழலை மொழியும்**

திருமணத்தின் மாபெரும் கொடை குழந்தைகள். **“பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்”**[1] என்ற இறைவாக்கு முதல் பெற்றோரான ஆதாம் ஏவாளுக்கு இறைவன் வழங்கிய ஆசியுரை ஆகும். ஒரு மனிதனுக்கு இறைவன் தரும் இரண்டு பேறுகள் அவற்றில் ஒன்று நல்ல மனைவி மற்றொன்று நல்ல பிள்ளைகள் என்று திருவிவிலியம் முன்வைத்துப் பேசுகிறது. **“உம் இல்லத்தில் உம் துணைவியார் கனிதரும் திராட்சைக் கொடிபோல் இருப்பார். உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கிளைகள் போல் உம்மைச் சூழ்ந்திருப்பார்”**[2] மேலும் **“பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்”**[3] இவ்வாறாக மக்கட்பேறுபற்றிக் குறிப்பிடுகிறது. இத்தகைய மக்கட்பேற்றைத் தமிழ் இலக்கியங்களும் சுட்டிக்காட்டுகின்றன. **“குழவி மருங்கினும் கிழவதாகும்”**[4] என்ற தொல்காப்பிய

இலக்கணத்தால் சுட்டப்படும் இலக்கியம் பிள்ளைத் தமிழ். இவ்விலக்கியம் குழந்தையின் பத்துப் பருவ நிலைகளை எடுத்துரைக்கிறது. ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகை உண்டு. முதல் ஏழு பருவநிலைகள் இருவருக்கும் பொதுவாகவும் மீதி மூன்று தனித்தனியாகவும் அமையும் எனக் குறிப்பிடுகிறது. இதுபோன்ற பல இலக்கியங்கள் பிள்ளைகளைப் நிலையைப் பற்றி சிறப்புற எடுத்துரைக்கின்றன. ஆகவே இப்பருவ நிலைகளைத் திருக்குறளிலும் காணமுடிகிறது. மழலைச் சொல்லுக்கு மயங்காதவர் யாரும் இல்லை என்று கூறலாம்.

**“மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொல்கேட்டல் இன்பம் செவிக்கு”**[5]

குழந்தைகளைக் கட்டித் தழுவுவது உடலுக்கு இன்பம் தருவதும் அக்குழந்தைகளின் மழலைப் பேச்சு செவிக்கு இன்பம் தருவதுமாக அமைகின்றது. என்று குறிப்பிடுகிறது.

**“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்”**[6]

தங்கள் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதவர்கள்தான் குழலோசையும் யாழோசையும் இனிமையாக இருக்கிறது என்பார் வள்ளுவர். மழலை மொழியை இனிய ஓசைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவதை அறியமுடிகிறது.

**“குழவி தளர்நடை காண்டல் இனிதே**
**அவர் மழைல கேட்டல் அமிழ்தின் இனிதே**
**வினையடையான் வந்து அடைந்து வெய்து உறும்போழ்து**
**மனன் அஞ்சான் ஆகல் இனிது”**[7]

என்று மழலைச் செல்வத்தின் சொற்களை அமிழ்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறது இனியவை நாற்பது, குழந்தையின் தளர் நடையைக் காணுதல் இனிது. அக்குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டல் அமிழ்தத்தைவிட இனிது. தீவினைகளுக்கு உரிய விளைவு நம்மை வந்து அடைந்து துன்பப்படுத்தும்போது அஞ்சாத மனம் கொண்டிருத்தல் இனிது. ஆகவே மழலைச் சொற்கள் மற்றவருக்குப் புரியவில்லை என்றாலும் அவர்கள் சொல்லும் விதமும் எழுப்பும் ஓசைகளும் செய்கின்ற மழலைச் சேட்டைகளுக்கும் மயங்காதவர் யாருமே இல்லை என்று கூறலாம்.

**“அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்”**[8]

காணக் கிடைக்காத ஒன்றை அமிழ்தாகக் (அமிர்தமாக) குறிப்பிட்டாலும் தம்முடைய குழந்தைகளின் பிஞ்சுக்கரத்தால் அளாவிய கூழானது அமிழ்தமாகக் (அமிர்தமாக) கருதப்படும். சில நேரங்களில் மழலைகளுக்குச் சோறூட்டும்போதும் அல்லது மற்றவர்கள் சாப்பிடும்போதும் குழந்தையின் கைகள் அழுக்குப்படிந்திருந்தாலும் உணவை பிசைந்துவிடும். ஆனாலும் இதை அமிர்தமாகக் கருதி உண்பர். இத்தகைய மழலைகளின் தன்மையே மிக உயர்வானதாகக் கருதப்படுகிறது திருவிவிலியத்தில். மழலைச் செல்வம் இறையரசுக்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது. **“சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது”**[9]

இவ்வார்த்தைகளிலிருந்து குழந்தைகள் கள்ளம் கபடற்றவர்கள் என்பதை அறியமுடிகிறது. இதனால் குழந்தைகள் கடவுளுக்கு நிகர் என்பதாகக் கருதப்படுகிறது. இவ்வாறு இல்லறத்தில் மழலைகளின் மகத்துவத்தை அறிய முடிகிறது.

**பிள்ளைகள் வளர அறிவும் அறமும்**

இல்வாழ்க்கையில் பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களை வளர்த்து ஆளாக்குவது இல்லறத்தின் நிறைவுப் பகுதி என்று கூறலாம். பிள்ளைகளை வளர்த்தெடுக்க **"உன் மகனுக்கு நற்பயிற்சி அளி"**[10] என்று பெற்றோருக்கும் நற்பயிற்சி அளிக்கும்போது அது கடினமாக இருந்தாலும் பெற்றோரின் சொற்களைக் கேள் என்று பிள்ளைகளுக்கும் அறிவுரை கூறுவதுபோல திருவிவிலியம் முன்வைத்துப் பேசுவதைக் காணமுடிகிறது. **"பிள்ளாய் உன் தந்தையின் கட்டளையைக் கடைப்பிடி, தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே அவற்றை எப்போதும் உன் இதயத்தில் இருத்தி வை. உன் கழுத்துக்கு மாலையென அணிந்துகொள். நீ நடந்து செல்லும்போது அவை உனக்கு வழி காட்டும். நீ படுத்திருக்கும்போது அவை உன்னைக் காவல் காக்கும். விழித்திருக்கும்போது உன்னுடன் உரையாடும். கட்டளை என்பது ஒரு விளக்கு, அறிவுரை என்பது ஒளி, கண்டித்தாலும் தண்டித்தாலும் நல்வாழ்வுக்கு வழி"**[11] இத்தகைய மனநிலையில்தான் அனைத்துப் பெற்றோரும் தன் குழந்தைகளை வளர்க்க ஆசைப்படுகின்றனர். இச்சமுதாயத்தில் தன் குழந்தை ஒரு நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று ஆசிக்கின்றனர். இதற்காகப் பெரும்பாலான பெற்றோர்கள் எந்த அளவிற்கு இறங்கி உழைக்க வேண்டுமோ அந்த அளவிற்குத் தியாகம் செய்து உழைத்து வளர்க்கிறார்கள் என்பதை பெரும்பாலான இல்லறங்களில் கண்கூடாகக் காண முடிகிறது. இருப்பினும் சில நேரங்களில் பிள்ளைகள் தடம்மாறி வளர்வதையும் காணமுடிகிறது. இதைத் தவிர்ப்பதற்குதான் திருவள்ளுவர் இங்கு ஒரு சிறந்த நுணுக்கத்தைக் கையாளுகின்றார். அதாவது,

**"பெறும்மவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற"**[12]

இல்வாழ்க்கையில் சிறந்த செல்வங்கள் இருந்தாலும் அறிவில் சிறந்த பிள்ளைகள்தான் சிறந்த செல்வமாகக் கருதப்படுகின்றனர். அறிவு என்ற நுணுக்கத்தைக் கையாளுகின்றார். அது கல்வி அறிவாகட்டும் அல்லது நன்நெறி அறிவாகட்டும் எத்தகைய அறிவாக இருந்தாலும் அதில் சிறந்து விளங்கினால் இதைவிட இல்லற வாழ்க்கையில் சிறந்த செல்வங்கள் ஏதும் இல்லை என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். ஆகவே இல்லறத்தில் பெற வேண்டிய பதினாறு பேறுகளில் மிகச் சிறந்த பேறு அறிவு செறிந்த மக்கட்பேறு என்பதை மிகத் தெளிவாக மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் முதல் குறளிலே வள்ளுவர் குறிப்பிடுவதை அறியமுடிகிறது. மேலும்,

**"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்"**[13]

அறம் சார்ந்த பிள்ளைகளைப் பெற்றெடுத்தால், பெற்றோர்களுக்கு எந்த காலத்திலும் துன்பம் வராது. ஆகவே குழந்தைகளைப் பெற்றெடுத்தால் பண்புடைமை மக்களாகப் பெற்றுக்கொள் இல்லை என்றால் பெற்றுக்கொள்ளாதே இதனால் நீங்களும் இச் சமுதாயமும் காலத்திற்கும் துன்பப்படும் என்கின்ற மிகத்

தெளிவான கருத்தை முன்வைக்கிறார். மேலும் கற்றோர்களால் தன் மக்களைப் புகழும்படி வளர்த்தாளாக்குவது என்பது சிறப்புக்குறியது என்பதை அறியமுடிகிறது.

**“தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்”**[14]

கற்றோர் அவையில் தம் மக்களைப் புகழுடன் விளங்கச் செய்வதே தந்தையின் மேலான கடமையாகும். மேலும் பெரும்பாலான பெற்றோர்கள் தம்மைவிட தம் பிள்ளைகள் அனைத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாது தம்மைவிட உயர்ந்தவர்களாகத் திகழவேண்டும் எனக் கருதுவதும் இயல்பு. இத்தகைய நிலையை கீழ்க்காணும் குறள் எடுத்துரைக்கிறது.

**“தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது”**[15]

தம்மைவிட தம்மக்கள் அறிவிற் சார்ந்து, அறம் சார்ந்து விளங்கினால் அது பெற்றோர்களுக்கு மட்டுமல்ல சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் நன்மை தருகிறது. இத்தகைய கருத்துகளை பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**“செந்நெல்லால் ஆய செழு முளை மற்றும் அச்**
**செந்நெல்லே ஆகி விளைதலால் அந்நெல்**
**வயல் நிறையக் காய்க்கும் வளவயல் ஊர**
**மகன் அறிவு தந்தை அறிவு”**[16]

வயலில் விளையும் நல்ல நெல் விதை நெல்லாகி அடுத்த பருவமும் சிறப்புற விளைவதற்கு ஏதுவாகும். அதுபோல தந்தையரின் அறிவுக்குத் தன்மகனின் அறிவு அமையும். இப்பாடலில் இரு கருத்துகள் புலப்படுகின்றன ஒன்று தந்தையானவர் விதை நெல்லுக்கு ஒப்பிடப்படுகிறார். மற்றொன்று தந்தையானவர் அறிவில் சிறந்து விளங்கினால் அவர் மகனும் சிறந்த அறிவு பெற்றிருப்பார் என்பதை அறியமுடிகிறது. இதைத்தான் இன்றைய சமுதாயத்தில் பார்க்கமுடிகிறது. குறிப்பாகத் தந்தை ஆசிரியராக இருந்தால் மகனும் ஆசிரியராகவும் அல்லது தந்தை தொழில் அதிபராக இருந்தால் மகனும் அவ்வாறே காணப்படுதலும் இவ்வாறு அந்தந்த துறைகளில் வளர்த்தெடுப்பதைக் காணமுடிகிறது. மேலும்

**“நோக்கி அறிகல்லாத் தம் உறுப்பு கண்ணாடி**
**நோக்கி அறிப அதுவேபோல் நோக்கி**
**முகன் அறிவார் முன்னம் அறிப அதுவே**
**மகன் அறிவு தந்தை அறிவு”**[17]

தம் கை கால்களைத் தம் கண்ணாலே தாமே பார்த்துக் கொள்ள முடியும். ஆனால் தம் முகத்தை தம்மால் பார்க்க முடியாது. மாறாக கண்ணாடி வழியாகத்தான் பார்க்க முடியும். அதுபோல தன் அறிவின் அளவை அளந்துகொள்ள அவருடைய மகனின் அறிவை அறிந்து கொண்டால் போதும், தந்தை அறிவை அறிந்து கொள்ளலாம் அளந்து கொள்ளலாம். ஆகவே தந்தை எவ்வழியோ மகனும் அவ்வழியே என்பதைக் காணமுடிகிறது. மேலும் இத்தகைய கருத்துகளைத் திருவிவிலியம் எடுத்துரைக்கிறது **“மரம்**

**நல்லது என்றால் அதன் கனியும் நல்லதாக இருக்கும்"**[18] மேலும் இறைமகன் இயேசு ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கினார் என்பதை அவரின் பனிரெண்டு வயது போதனையிலிருந்து அறியமுடிகிறது. **"அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்துகொள்ளும் திறனையும் அவர்அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர். அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர்"**[19] ஆகவே பிள்ளைகளுக்கு சொத்து சுகங்களை சேர்த்து வைப்பதைவிட அறத்திலும் அறிவிலும் வளர்த்தெடுப்பதால் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதையும் இதனால் பெற்றோர்களுக்குப் பெருமையும் வந்து சேரும் என்பதைக் காணமுடிகிறது.

**பிள்ளைகளின் பெருமையும் கடமையும்**

இல்லறத்தில் பிள்ளைகளுக்கான பெருமைகளும் சில கடமைகளும் உண்டு என்பதைப் பிள்ளைகள் உணர்ந்து வாழ்தல் வேண்டும். தம்மை விடச் சிறந்த சந்ததியை உருவாக்குவது பெற்றோர்களின் நோக்கமாக இருந்தாலும் இதைப் பிள்ளைகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் அப்பிள்ளைகளின் வாழ்வு பெருமைக்குறியதாக அமைகிறது. இதைத்தான் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**[20]

அறம்சார்ந்த மகனை பெற்றெடுத்தவளென்று, பிறரால் பாராட்டப்படும்போது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரும் மகிழ்ச்சி அடைவாள். இவ்வாறு ஒரு தாய் மகழ்ச்சி அடைய வேண்டுமென்றால் தான் பெற்ற பிள்ளைகளின் வாழ்க்கை முறை உயர்ந்து காணப்பட வேண்டும். ஆகவே மற்றவர்களால் பாராட்டு கிடைப்பது என்பது பல நாட்கள் அதற்காக உழைக்க வேண்டும் முயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் இத்தகைய பெருமைவந்து சேரும் எனக் கீழ்க்காணும் குறளும் முன்வைத்து பேசுவதைக் காணமுடிகிறது.

**"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்"**[21]

இவனைப் பிள்ளையாகப் பெற்றதற்கு என்ன தவம் செய்தானோ என்று புகழப்படுவதுதான் தந்தைக்கு தன் பிள்ளை செய்யும் பெரிய கடமையாகும். ஆகவே அந்தளவிற்கு மகன் அறம் சார்ந்த வாழ்க்கை வாழவேண்டும். மேலும் பெற்றோர்களை வயது முதிர்ந்த காலத்தில் பேணிக்காத்தல் என்பது பிள்ளைகளின் அறிய கடமையாகக் கருதப்படுகிறது. **"ஆல் ஒடிந்து வீழ்ந்தாலும் தோள்கள் தாங்கும் அப்படி நாம் பிள்ளைகளை வளர்த்த தாலே"**[22] ஆல மரம் தான் வீழ்கின்ற நிலை வந்தாலும் அதனுடைய விழுதுகள் தோள் கொடுத்துத் தாங்கும். அதுபோல தந்தையின் நிலை தடுமாறினாலும் தோள்கொடுத்துத் தாங்கும் தன்மை கொண்டவர்கள் பிள்ளைகள் என்பதை,

**"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை**
**மதலை ஆய் மற்று அதன் வீழ் ஊன்றியாங்கு**

**குதலைமை தந்தைகண் தோன்றின் தான் பெற்ற**

**புதல்வன் மறைப்பக் கெடும்"[23]**

விழுதுகள் பரப்பிய ஆலமரத்தின் வேரைச் செல் அரித்துத் தின்று விட்டாலும் மரம் வீழாமல் விழுதுகள் தாங்கிக் கொள்ளும். அதைப்போலத் தந்தையின் இடத்து ஏதேனும் தவறு நேர்ந்தால் அவன் பெற்ற மகனின் முயற்சிகளால் தந்தையின் பெருமையும் தனையனின் பெருமையும் வீழாமல் காக்கப்படும். "**தந்தை தாய்ப் பேண்"[24]** பெற்ற தந்தையையும் தாயையும் தொடர்ந்து காப்பாற்றுதல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோரைக் கவனிக்காமல் கைவிடுகின்றனர். இதனால் அநேக இடங்களில் முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன. தற்போது பணம் கொடுத்துக் காக்கப்படுகின்ற முதியோர் இல்லங்களும் அதிகமாகிவிட்டன. இந்த நிலை மாற வேண்டுமென்றால் பிள்ளைகள் உணர வேண்டியது, இன்று நீ நாளை நான் என்பதை சிந்தையில் வைத்தால் இந்த அவல நிலை மாறும் என நம்பப்படுகிறது.

**பிள்ளைகளினால் வரும் இன்னல்களும் அவலங்களும்**

இல்லறத்தில் சில அறநெறியற்ற பிள்ளைகள் காணப்படுவதால் இல்லறமும் ஒட்டுமொத்த சமுதாயமும் சீர்கேடு அடைகிறது. இவர்களினால் பல்வேறு பிரச்சனைகளும் பெற்றோருக்கு அவமானங்களும் ஏற்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் அவனைச் சுற்றியுள்ள சமுதாயத் தாக்கங்களும் வயதுக்கு மீறிய வளைதளங்களும் ஊடங்கங்களின் தாக்கமும் முறையற்ற நண்பர்களின் உறவு முறைகளும் கட்டுப்பாடற்ற பழக்க வழக்கங்களும் அளவுக்கு மீறிய வசதி வாய்ப்புகள் மற்றும் குடும்பங்களில் தாய் தந்தை இருவருமே வேலைக்குச் செல்லும் நிலை. இது போன்ற பிரச்சனைகளை இன்று சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். சில காலங்களுக்கு முன் பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் ஆசான்களுக்கும் பயம் கலந்த மரியாதையோடு இருந்தவர்களின் நிலை இன்று அப்படியே தலைகீழாகமாறி இருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. பிறக்கும்போதே மென்பொருள்களோடும் பத்து வயதாகும் முன்னே பான்பிராக் முதலிய போதைப்பொருட்களோடும் படிக்கும் முன்பே தங்களின் வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்கின்றனர். இக்காலச்சூழலில் பிள்ளைகளின் வெளித்தோற்றமும் உள்தோற்றமும் மாறி காணப்படுகிறது. ஒரு காதிலே கம்மலும், தலைமுடியில் கோடுகளும், கையில் இரும்பினால் முறுக்கிய வளையங்களும், ஆங்காங்கே ஒட்டுப் போட்ட உடைகளையும், இதுபோன்று பேஷன் என்ற பெயரில் உண்மைத் தோற்றத்தை மாற்றிக்கொண்டு ஊதாரித்தனமாகச் சுற்றித் திரிவதை கண்கூடாகக் காணமுடிகிறது. ஆகவே இத்தகைய நிலை வேண்டாம் இதனால் பல்வேறு இன்னல்கள் வந்து சேரும் என்று திருவிவிலியம் முன்வைத்துப் பேசுகிறது. **"ஊதாரிகளோடு சேர்ந்துகொண்டு திரிபவன் தன் தந்தைக்கு இழிவு வரச்செய்வான்"[25]** என்றும், **மேலும் "மதிகெட்ட மகனால் அவன் தந்தைக்குக் கேடு வரும்"[26]** என்றும், இதற்குச் சான்றாக புதிய ஏற்பாட்டில் லூக்கா நற்செய்தியில் ஒரு தந்தைக்கு இரு புதல்வர்களின் கதையைச் சித்தரித்துக் காட்டியுள்ளது. இதில் இளைய மகன் தந்தையின் சொல்லைக் கேளாது ஊதாரித்தனமாகச் சென்று உல்லாசமாக நண்பர்களுடன் இருந்து இறுதியில் எல்லாவற்றையும் இழந்து பிறகு தன் தவற்றை உணர்ந்து தந்தையிடம்வர, தந்தையானவர் தன்மகனை மன்னித்து ஏற்றுக்கொள்வர். இவ்வாறாக அமைகின்றது இக்கதை. இதுபோல பெரும்பாலான பிள்ளைகள்

குறிப்பாக ஆண்பிள்ளைகள் இன்று நடைமுறை வாழ்க்கையில் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இத்தகையவர்களை இச்சமுதாயத்தில் பார்த்த நீங்கள், இப்படிப்பட்ட அறநெறியற்ற பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளாது சந்ததியே இல்லாமல் இருந்து விடுங்கள் என்று பெற்றோர்களை எச்சரிக்கிறது வெற்றி வேற்கை கீழ்க்காணும் பாடலில்,

**"அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்**
**கொச்சைம க்களைப் பெறுதலின் அக்குடி**
**எச்சம் அற்று ஏமாந்திருக்கை நன்றே"**[27]

பயம் கலந்த அறிவு இல்லாத இழிந்த அறநெறியற்ற குழந்தைகளைப் பெறுவதைவிட அப்பெற்றோர் சந்ததியே இல்லாமல் பாதுகாப்புடன் இருத்தலே நன்று என்று உரக்கச் சொல்லுகிறது. மேலும் இக்கருத்துகளை ஒட்டி பன்றியும் யானையும் பிள்ளைகளுக்கு ஒப்பிட்டு பெற்றோர்களுக்கு அறிவுரை கூறும் ரீதியில் நீதி வெண்பா பாடல் எடுத்துரைக்கிறது.

**"பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்**
**நற்புதல்வனைப்பெறுதனன்றாமே - பொற்கொடியே**
**பன்றிபல குட்டி பயந்ததினா லேதுபயன்**
**ஒன்றமையா தோகரிக்கன் றோது"**[28]

பன்றி பல குட்டிகளைப் போடுகிறது. ஆனால் என்ன பயன்? யானை ஒரே ஒரு குட்டியை ஈனுகிறது. அதுபோல அறிவில்லாத பிள்ளைகள் பலரைப் பெற்றெடுப்பதைக் காட்டிலும் நல்ல புதல்வனைப் பெற்றெடுத்தாலே நன்று என்கிறது. ஆகவே இத்தகைய அறநெறியற்ற செயல்களால் உண்டாகும் அவலநிலைகளையெல்லாம் விடுத்து பிள்ளைகளே நீங்கள் அறநெறியோடு நீண்ட காலம் வாழ வேண்டுமா? கீழ்க்காணும் வாக்குறுதியை கையில் எடுத்துக் கொள்ளுங்கள் அதை உங்கள் வாழ்க்கையில் கடைபிடியுங்கள் என்கிறது திருவிவிலியம். **"பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள் ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. இதனால் நீ நலம் பெறுவாய் மண்ணுலகில் நீடூழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி"**[29] ஆகவே பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்தும் மதித்தும் நடந்தாலே நல்லதோர் இல்லமும் சமுதாயமும் உருவாகும் என்பதை அறியமுடிகிறது.

**மதிப்பீடு**

- இல்வாழ்க்கையில் பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களை அறநெறியில் வளர்த்து ஆளாக்குவது இல்லறத்தின் நிறைவுப் பகுதி எனக் கருதுவதோடு திருமணத்தின் மாபெரும் கொடை குழந்தைகள் என்பது புலனாகிறது.
- குழந்தைகளைக் கட்டித் தழுவுவது உடலுக்கு இன்பமும் அக்குழந்தைகளின் மழலைப் பேச்சு செவிக்கு இன்பமும் தருகிறது. மழலைச் செல்வத்திற்கு மயங்காதவர் யாரும் இலர் என்பது உறுதி செய்யப்படுகிறது.

- பிள்ளைகளுக்கு சொத்து சுகங்களை சேர்த்து வைப்பதைவிட அறத்திலும் அறிவிலும் வளர்த்தெடுப்பதால் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதையும் இதனால் பெற்றோர்களுக்குப் பெருமையும் வந்து சேரும் என்பதைக் காணமுடிகிறது.
- பெற்றோர்களை வயது முதிர்ந்த காலத்தில் பேணிக் காத்தல் என்பது பிள்ளைகளின் அறிய கடமையாகக் கருதப்படுகிறது.
- இக்காலச் சூழ்நிலையில் வயதுக்கு மீறிய வலைதளங்களும் ஊடங்கங்களின் தாக்கமும் முறையற்ற நண்பர்களின் உறவு முறைகளும் கட்டுப்பாடற்ற பழக்க வழக்கங்களும் அளவுக்கு மீறிய வசதி வாய்ப்புகளும் பிள்ளைகளின் அறநெறியை இழக்கச் செய்கின்றன என்பதைக காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தொடக்க நூல், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.4.
2. திருப்பாடல்கள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.734.
3. மேலது, ப.733.
4. ச.வே. சுப்ரமணியன், தொல்காப்பியம், ப.390.
5. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.40.
6. மேலது, ப.40.
7. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. இனியவை நாற்பது, ப.86.
8. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.39.
9. திருத்தூதர் மாற்கு, புதிய ஏற்பாடு, மாற்கு நற்செய்தி திருவிவிலியம், ப.68.
10. சீராக், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.1282.
11. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.752.
12. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.38.
13. மேலது, ப.38.
14. மேலது, ப.40.
15. மேலது, ப.41.
16. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. நாலடியார், ப.43.
17. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. பழமொழிநானூறு, ப.236.

18. திருத்தூதர் மத்தேயு, புதிய ஏற்பாடு, மத்தேயு நற்செய்தி, திருவிவிலியம், ப.21.

19. திருத்தூதர், லூக்கா, புதிய ஏற்பாடு, லூக்கா நற்செய்தி, திருவிவிலியம், ப.88.

20. புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.41.

21. மேலது, ப.42.

22. கமலா முருகன், குடும்ப விளக்கு, ப.41.

23. க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. நாலடியார், ப.178.

24. ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஆத்திசூடி, நீதி நூல்கள், ப.28.

25. நீதிமொழிகள், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.772.

26. மேலது, ப.763.

27. பத்மதேவன், வெற்றி வேற்கை, நீதி நூல் களஞ்சியம், ப.69.

28. க.ப. அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், ப.630.

29. திருத்தூதர் எபேசியர், புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.290.